DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No 6/2023 Res.E. RW– 1

DVC.No.

| | |
|---|---|
| Name | : சீதா (2ம் எதிர்மனுதாரர்) |
| Father's/Husband's Name | : மங்கபாகன் |
| Village | : மூங்கில்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 55 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of January 2026

(மனுதாரர் ஆஜர். மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1ம் எதிர்மனுதாரர் ஆஜரில்லை. 2ம் எதிர்மனுதார் ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை)**

2) எனக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். எனது மூத்த மகன் தான் இந்த வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். எனது இரு மகன்களும் வெளிநாட்டில் கம்பி கட்டும்வேலை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது மூத்த மகனின் திருமணம் ஆனது இருவீட்டார் சம்மதத்துடன் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணம் ஆனது எனது வீட்டிற்கு அருகே உள்ள விநாயகர் கோவிலில் நடந்தது. திருமணத்தின் போது மனுதாரருக்கு சீர்வரிசை பொருட்கள் மற்றும் நகை போட்டார்கள் என்றால் சரிதான். நகைகள் மனுதாரர் வசம்தான் உள்ளது. 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமணத்தின் போது நகைகள் போட்டார்களா என்றால் இல்லை. திருமணத்திற்கு பிறகு மனுதாரர்

எங்களுடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். ஒன்றாம் எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் திருமணத்திற்கு முன்பு குடிப்பழக்கம் இருந்தது தற்போது இல்லை.

3) எனக்கு அபிராமி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அபிராமி என்பவர் 1ம் எதிர்மனுதாரர் பாலகிருஷ்ணன் தனக்கு பாலியல் துன்புறுத்தல் தருவதாக நத்தம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும், மேற்படி புகாரின் அடிப்படையில் நடைபெற்ற விசாரணையில் நானும், மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் கலந்து கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி புகாரின் அடிப்படையில் எனது மகன் சிறைக்கு சென்றார் என்றால் சரிதான். அதன் பிறகு அவர் பிணையில் வந்துவிட்டார். அந்தப் புகார் ஆனது மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால்(Quash) தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எதற்காக மனுதாரருக்கும் ஒன்றாம் எதிர்மனுதாரருக்கும் அடிக்கடி சண்டை வரும் என்றால் சிறு சிறு குடும்ப பிரச்சனை காரணமாக சண்டை ஏற்படும்.

4) எனது மகன் மேற்படி அபிராமி என்பவருடன் தவறான பழக்கத்தில் அவரது பேச்சைக் கேட்டு அடிக்கடி மனுதாரரை அடித்து துன்புறுத்தி வந்தார் என்றாலும் அதைப்பற்றி மனுதாரர் என்னிடம் எடுத்து சொல்லியும் நான் அதை கண்டு கொள்ளாததால் எனது வீட்டில் அவர் கஷ்டஜீவனம் நடத்தி வந்தார் என்றாலும், அதனால் தான் அவர் பிரச்சினை ஏற்பட்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றாலும் சரியல்ல. மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு சென்று மனுதாரரை அழைத்தோமா என்றால் அழைத்தோம் ஆனால் அவர் வர முடியாது என்று சொல்லி மறுத்துவிட்டார். 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர்

மற்றும் அவரது குழந்தைக்கு உரிய பராமரிப்பு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்